# கழிவு முகாமைத்துவத்தில் முன்னேற்றத்தை காண்பதன் மூலம் சமுத்திரத்தை பாதுகாப்பதற்கு இலங்கையுடன் இணைந்து செயற்படும் யுஎஸ்எயிட்

மேல்மாகாணத்தின் கரையோரப்பகுதியிலும், காலியிலும் மாநாகர கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளிற்காக மூன்று நிறுவனங்களிற்கு, அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பு (யுஎஸ்எயிட்) 97 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது.

ஜனதக்சன்,செவென்த,அபிவிருத்தி உதவிக்கான இலங்கை நிலையம் ஆகிய அமைப்புகளிற்கே இந்த உதவியை யுஎஸ்எயிட் வழங்கியுள்ளது. மூன்று நிறுவனங்களும் உள்ளூராட்சி அமைப்புகளுடன் இணைந்து முறையற்ற விதத்தில் வீசப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்கள் கடலுக்குள் செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகளிற்கு உதவவுள்ளன .திண்ம கழிவு அகற்றல் முகாமைத்துவம் தொடர்பில் மக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிப்பது மற்றும் மக்களிற்கு பயிற்சிகளை வழங்குவது போன்ற நடவடிக்கைகளையும் இந்த அமைப்புகள் முன்னெடுக்கவுள்ளன.

"கடந்த ஒரு தசாப்தகாலப்பகுதியில் மாநகர கழிவுகள் அவற்றை அகற்றும் வழிமுறைகளில் கவனம் செலுத்தல் என்ற நிலையிலிருந்து அவற்றை தடுத்தல் மற்றும் மீள்சுழற்சி என்ற நிலைக்கு மாறியுள்ளன. இலங்கை தனது நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதற்கும் மாநகர குப்பை அகற்றல் முகாமைத்துவத்தை குப்பைகளின் உயர்மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும் யுஎஸ்எயிட் அமைப்பின் உதவி துணை புரியும்" என யுஎஸ்எயிட் அமைப்பின் இலங்கைக்கான இயக்குநர் அன்ரூ சிசன் தெரிவித்தார்.

வணிக வளாகங்கள், உணவுவிடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் அதிகளவு பொலித்தீன் பாவனைக்கான காரணம் என்னவென்பதுகுறித்து தீவிர ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு யுஎஸ்எயிட்டின் நிதி உதவியாக அமையும்.தொடர்ச்சியான கழிவு முகாமைத்துவத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைள் குறித்தும் இந்த திட்டம் ஆராயும்.இந்த ஆய்வின் அடிப்படையில்

மாற்றுப்பொருட்களை பயன்படுத்துவதற்கான திட்டத்தை நிபுணர்கள் வகுப்பார்கள்.மீள்சுழற்சி செய்யக்கூடிய மீண்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்கினை உரமாக்குதல் மற்றும் விற்பனையின் மூலம் வாழ்வாதரம் மற்றும் வருமானத்தை ஈட்டுதல் ஆகியவற்றிற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.